Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 389/2023 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW2 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | ஸ்டீபன் |
| Father's Name | – | அதிசயராஜ் |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 21st November 2025.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused 1 to 3 present. Accused counsel present.

**முதல் விசாரணை :**

நான் தற்போது பொள்ளாச்சி தாலூக்கா காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். மேற்படி காவல்நிலையத்தில் பணியாற்றிய உதவி ஆய்வாளர் திரு.தெய்வேந்திரன் அவர்களின் கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன்.

கடந்த 19.01.2023 ம் தேதி உதவி ஆய்வாளர் அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது, பெருமாள் மகன் ஆறுமுகம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினைப் பெற்று நிலையக்குற்ற எண்.16/2023, சட்டப்பிரிவு 379 இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். அந்த புகார் **அ.சா.ஆ.3** மற்றும் முதல் தகவலறிக்கை **அசாஆ.4** ஆகும். பின்னர் வாதியின் புகாரை இணைத்து முதல் தகவலறிக்கையின் அசலை கனம் நீதித்துறை நடுவர் எண்.2, பொள்ளாச்சிக்கும் இதர நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

பின்னர் அன்றைய தினமே 09.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் ரமேஷ்குமார் மற்றும் சுப்ரமணியம் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அவைகள் முறையே பார்வை மகஜர் **அசாஆ.5,** மாதிரி வரைபடம் **அசாஆ.6** ஆகும். பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலானவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

பின்னர் எதிரிகளை தேடிவந்த நிலையில் 19.01.2023 ம் தேதி கோட்டூர் காவல்நிலைய உதவி ஆயவாளர் கோட்டூர் காவல்நிலைய குற்ற எண்.18/2023, சட்டப்பிரிவு 379 இதசன் கீழ் வழக்கின் எதிரிகளை தேடி நிலையில், வஞ்சியாபுரம் பிரிவில் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது, TN 99 S 3394 என்ற வாகனத்தில் வந்தவர்களை பிடித்து விசாரிக்கையில் அவர்கள் தாமாக முன்வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் பொள்ளாச்சி தாலூக்கா காவல்நிலைய குற்ற எண்.16/2023 ன் களவு போன ஆடு ஒன்றை திருடியதாக ஒப்புக்கொண்டவரை சாட்சிகள் தங்கவேல் மற்றும் மணிகண்டன் ஆகியோர்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.**7 ஆகும்.

பின்னர் 24.01.2023 ம் தேதி காலை 11.00 மணிக்கு இவ்வழக்கில் களவு போன ஆடு ஒன்றை மணிகண்டன் என்பவர் பொள்ளாச்சி தாலூக்கா காவல்நிலையத்தில் கொண்டு வந்து ஆஜர்படுத்தியதை படிவம் 91 மூலம் கைப்பற்றியுள்ளார். அந்த படிவம் 91 **அ.சா.ஆ.8** ஆகும்.

பின்னர் மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் மற்ற எதிரிகளான வெங்கட்ரமணி, அஜய்குமார் ஆகியோர்கள் ஏற்கனவே கோட்டூர் காவல்நிலைய குற்ற

எண்.18/2023 ல் பொள்ளாச்சி கிளை சிறையில் நீதிமன்ற காவலில் இருந்த படியால் எதிரிகளை சம்பிரதாய கைது செய்து PT Warrant மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். பின்னர் இத்துடன் அவரது புலன் விசாரணையை முடித்து எதிரிகளுக்கெதிராக மேற்படி பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/- Thiru. E. Pragasam BA.,BL.,)**

Judicial Magistrate No.II,
Pollachi